**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 286 /2019 DW1 .**

| | |
|---|---|
| பெயர் : பெரியசாமி | தந்தை/கணவர் பெயர்: லக்கையா நாயக்கர் |
| ஊர் : | தாலுகா : |
| வயது : | தொழில் : |
| ஜாதி : | சமயம் : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.02.2026

---

**(மனுதாரர் ஆஜர். எதிரி ஆஜர்)**

**02.02.2026 முதல் விசாரணை:**

1.நான் படிப்பறிவற்றன். நான் என் வயலில் உழுவு செய்து கொண்டிருந்தேன் . துரைக்கண்ணு மகன் செல்வராஜ் ஆவார். தள்ளுபடி லோன் கிடைக்கிறது போடுவோமா என்று கேட்டார். எனக்கு வேண்டாம் என்று மறுத்தேன். அது சுமார் 9 வருடங்களுக்கு முன்பு நடந்தது. கார்த்திகை, மார்கழி மாதத்தில் ஒரு லோன் போட்டு வாங்குவோமா என்று கேட்டார். அதனை நான் மறுத்து விட்டேன்.

2. நான் அரசுக்கடன் எப்போதும் வாங்கியது கிடையாது . அந்த பழக்கவழக்கமும் தெரியாது. அவர் பார்த்துக் கொள்ளலாம் என்று சொல்லி போய் விட்டார் . மறுநாள் அவரது மைத்துனர் இளவரசனும் , செல்வமலரும் வந்தார்கள். நாங்கள் கடன் வாங்கி தள்ளுபடி ஆகி விட்டது . அதனால் நீங்களும் கடன் வாங்குங்கள் என்று சொன்னார்கள். நான் வேண்டாம் என்று சொன்னேன். மீண்டும் மீண்டும் சொன்னதால் எங்கு சென்று வாங்க வேண்டும் என்று கேட்டேன் . லோன் புரோக்கர் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள்.

3. தேத்தாம்பட்டி ராஜா, மா.மு. கோவிலூர் கணேசன் அவர்கள் வந்து லோன் வாங்கி தருகிறோம் வா என்று சொல்லி நாளைக்கு திண்டுக்கல்லுக்கு வரும்படி அழைத்தார்கள். செலவு எவ்வளவு என்று கேட்டேன் . ரூ.5000/− கொண்டு வரும் படி சொன்னார்கள். நானும், செல்வராசும் திண்டுக்கல் சென்றோம் . அப்போது மதுரை பஸ்ஸ்டாண்டிற்கு தெற்குப்புறம் டீ கடையில் வைத்து கருப்பச்சாமி என்பவர் பேங்கில் இருந்து வருவார் என்று சொன்னார்கள் . அதே போல் கருப்பச்சாமி டீ கடையில்

வைத்து என்னை போட்டோ பிடித்தார்கள். செல்லில் வைத்து போட்டோ எடுத்தார்கள். Account போடனும், காசு கொண்டு வந்திங்களா என்று கேட்டார்கள். அந்த ரூ.5000/– பணத்தை செல்வராஜிடம் கொடுத்தேன்.

4. லோன் பாரத்தில் கையொப்பம் போடச் சொன்னார்கள் . நான் கையொப்பம் செய்தேன். ராஜா, கணேசன் ஆகியோர்கள் இருந்து கையொப்பம் வாங்கினார்கள். அந்த கையொப்பத்தை வைத்து ராஜா நான் ரூ.1,00,000 கடன் வாங்கியதாக திண்டுக்கல்லில் புரோநோட் வழக்கு போட்டுள்ளார். லோன் வந்து விடும் என்று செல்வராஜ் சொல்லவும் நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். 15 நாட்கள் கழித்து செல்வராஜிடன் லோன் வந்து விட்டதா என்று கேட்டேன். 5 நாள் காத்திருக்கும் படி சொன்னார் . 5 நாள் கழித்து மீண்டும் கேட்டேன். நான் வாங்கி தந்துவிடுவேன் பொறுத்துக்கொள் என்று சொன்னார்.

5. ஒரு மாதம் ஆன பின்பு வக்கீல் நோட்டீஸ் தான் வந்தது . செல்வமலர், அழகுலெட்சுமி, செல்வமலர் சின்னம்மா மகன் இளவரசன் ஒரே தேதியிட்டு 3 நோட்டீஸ் வந்தது. அழகுலெட்சுமி எனக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு கை நகல் **எ.த.சா.ஆ–1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. செல்வராஜிடம் நோட்டீஸ் வந்தது பற்றி கேட்டேன். அதற்கு பதில் நோட்டீஸ் அனுப்பி விடலாம் என்று சொல்லி என்னை வற்புறுத்தி வக்கீலிடம் அழைத்து சென்றார்கள் . அங்கு வக்கீலுக்கு ரூ .5000/– பணத்தை வாங்கி கொண்டார்கள். வக்கீல் நோட்டீஸ் விட்டாச்சு பிரச்சனை இல்லை என்று சொன்னார்கள்.

6. நான் மேற்படி செல்வமலர் , அழகுலெட்சுமி, இளவரசன் ஆகியோர்களுக்கு அனுப்பிய வழக்கறிஞர் பதில் அறிவுப்பு **எ.த.சா.ஆ–2 முதல் எ.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் திருப்பத்தூர் நீதிமன்றத்திலிருந்து எனக்கு நோட்டீஸ் வந்தது. திருப்பத்தூர் நீதிமன்றத்திலிருந்து எனக்கு வரப்பட்ட CC–135/18 மனு நகல் **எ.த.சா.ஆ–5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. நான் இது சம்மந்தமாக நத்தம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் . அவர்கள் நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதால் அங்கு பார்த்துக் கொள்ள சொன்னார்கள். நான் மேற்படி நபர்கள் மீது குற்ற வழக்கு தொடுக்க மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் பெற்ற Crl.O.P. (MD)No. 16123/2018–ன் உத்தரவு **எ.த.சா.ஆ.6** ஆக குறியீடு

செய்யப்படுகிறது. நான் வாங்க இருந்த சொத்தை வாங்கியதால் , உன்னை இப்படி மோசடி செய்தேன் என்று செல்வராஜ் என்னிடம் கூறினார்.

8. நான் செல்வராஜிடம் 15 வருடத்திற்கு முன்பாக வாங்கிய கடனை உன்னிடம் திருப்பி கொடுத்து விட்டேன் . இருந்தும் என்னை ஏன் மோசடி செய்தாய் என்று செல்வராஜிடம் கெஞ்சினேன். என்னிடம் 3 வருடத்திற்கு முன்பாக இடத்தை எழுதிக் கொடுத்தால் 4 வழக்குகளையும், வாபஸ் பெற்று கொள்வதாக செல்வராஜ் எனக்கு ஒரு ஆவணம் எழுதிக் கொடுத்தார் . அழகு லெட்சுமி என்பவரிடம் நான் உன்னிடம் செக் கொடுத்து காசு வாங்கினேனா என்று கேட்டேன். அழகு லெட்சுமி உன்னை யார் என்று தெரியாது. உன்மீது நான் வழக்கு போடவில்லை என்று சொன்னார்.

9. நான் அவர் அனுப்பிய அறிவிப்பை காண்பித்தேன் . நான் போடவில்லை செல்வத்திடம் கேட்டுக்கொள் என்று சொல்லி விட்டார் . நான் நீதிமன்றத்திற்கு வர மாட்டேன் என்று சொல்லி விட்டார் . அழகுலெட்சுமி போட்ட வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டது. மேற்படி அழகு லெட்சுமி தாக்கல் செய்த CC–285/2019 வழக்கு உத்தரவு **எ.த.சா.ஆ–7** ஆக குறியீடு செய்யப்படுகிறது . **ம.த.சா.ஆ–1** காசோலையிலுள்ள கையொழுத்து, கையொப்பமும் என்னுடையது கிடையாது . செல்வராசுடம் தான் எனது பாஸ்புக் உள்ளது . அதே என்னிடம் கொடுக்கவில்லை . என்னை மோசடி செய்து என்மீது வழக்கு போட்டுள்ளார்கள் . எனக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை . என்னை விடுதலை செய்யும் படி கேட்டுக்கொள்கிறேன்.

<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

10. நான் வழக்கு விவரங்களை எனது வழக்கறிஞரிடம் தகவல் சொன்னேனா என்றால் நான் சொல்லிருக்கலாம் பேப்பரைத்தான் வழக்கறிஞரிடம் கொடுத்தேன் . 15 வருடத்திற்கு முன்பு செல்வராஜ் என்னை ஒரு ஜவுளிக்கடைக்கு அழைத்து சென்றார் . அந்த ஜவுளிக்கடைக்காரரிடம் தான் நான் பணம் வாங்கினேன் . ஜவுளிக்கடைக்காரர், செல்வராஜ், எனக்கும் எந்த பஞ்சாயத்தும் காசுக்காக நடக்கவில்லை . அந்த பணத்தை நான் கட்டிவிட்டேன் . நான் சொல்லும் செல்வராஜ்க்கும் , செல்வமலருக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல . செல்வமலருக்கும்,இளவரசனுக்கும் செல்வராஜ் யார் என்று தெரியாது என்றால் சரியல்ல. உறவினர்கள் ஆவார்.

11. நான் செல்வராஜை நீதிமன்றத்தில் எனது தரப்பில் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான் . நான் செல்வராஜை விசாரிக்க தயாராக உள்ளேன் .

நான் அனுப்பிய எ.த.சா.ஆ 2 முதல் 4 வரையான பதில் அறிவுப்பு செல்வராஜ் என்னை வழக்கறிஞர் அலுவலகத்திற்கு அழைத்து சென்று அனுப்பியதாகும்.

12. எனக்கு பதில் அறிவுப்பு கொடுத்தவுடன் வழக்கறிஞர் , கைநகல், என்னிடம் கொடுத்தாரா என்று எனக்கு ஞாபகமில்லை . அறிவிப்பிற்கு முரணாக சங்கதிகளை நான் சாட்சியம் அளிப்பதால் பதில் அறிவிப்பு வேறு வழக்கறிஞர் அனுப்பியதாக திட்டமிட்டு பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல . வழக்கறிஞர் அறிவிற்ப்பிற்கு பின்னர் நான் சொல்லி உள்ள சங்கதிகள் எல்லாம் பொய்யானது என்றாலும் , நான் வழக்கிற்காக உருவாக்கியுள்ளேன் என்றால் சரியல்ல.

13. நான் பணம் வாங்கியதால் எனது பதில் அறிவிப்பில் காசோலையில் உள்ள கையெழுத்தை மறுக்க வில்லை என்றால் சரியல்ல . நான் திண்டுக்கல்லுக்கு லோன் வாங்குவதற்கு ஒரே ஒரு நாள் தான் போனேன் . அந்த தேதிக்கு முன்பாக திண்டுக்கல் ஆக்சிஸ் பேங்கில் எனக்கு Account எதுவும் இல்லை. ஒரே நாளில் வங்கி கணக்கு தொடங்கி காசோலை புத்தகத்தை மூன்றாம் நபருக்கு வங்கியிலிருந்து கொடுக்கமாட்டார்கள் என்றால் சரியல்ல.

14. உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவின் பிரமாண நகலை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் . எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் , மேற்படி மனுவில் சொல்லப்படவில்லை என்பதால் மேற்படி மனுநகல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. கருப்பச்சாமி, கணேசன் மீது நடவடிக்கை எடுத்தேனா என்றால் காவல் கண்காணிப்பாளர் திண்டுக்கல் அலுவலகத்தில் புகார் கொடுத்தேன் . மேற்படி புகாரில் கருப்பச்சாமி, கணேசன் குற்றத்தை ஒப்புக்கொள்ளவில்லை.

15. எனது தரப்பு வழக்கறிஞர் மேற்படி காசோலைகளை கருப்பச்சாமி , கணேசனிடம் கொடுத்து அவர்களிடமிருந்து செல்வராஜிடம் கொடுக்கப்பட்டு முடிக்கப்பட்டது என்று அ.சா.1–ன் குறுக்கு விசாரணையில் கேள்வி எழுப்பியிருந்தால் அது தவறு. செல்வமலருக்கு அனுப்பிய பதில் அறிவுப்பில் கருப்பச்சாமி, கணேசனுக்கு வங்கி சேமிப்பு கணக்கு தொடங்குவதற்கு ஆதார்கார்டு மற்றும் புகைப்படம் கொடுத்தாக சொல்லியுள்ளேன் என்றாலும் , அங்கு செல்வராஜ் வந்ததாகவோ காசோலை கொடுத்தாகவோ சொல்லவில்லை என்றால் சரிதான்.

16. அழகுலெட்சுமி தாக்கல் செய்த வழக்கில் நான் பதிலுரையில் காசோலையானது கருப்பச்சாமி , கணேசனுக்கு கொடுக்கப்பட்டது என்பது எனக்கு தெரியவந்தது என்று சொல்லியுள்ளேன் என்றால் இல்லை . வழக்கறிஞர் பதில் அறிவிப்பு, எனது முதல் விசாரணை சாட்சியம் , நான் தாக்கல் செய்துள்ள எதிர் உரை ஆகியவை அனைத்தும் ஒன்றுகொன்று முரண்பட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது தரப்பில் அ.சா.1 யை குறுக்கு விசாரணை செய்த போது செல்வமலர் , இளவரசன், யார் என்று தெரியாது என்று எதிர்வாதம் செய்து விட்டு தற்போது லோன் வாங்குவதற்கு முன்பாகவ இளவரசனும், செல்வமலரும் தள்ளுபடி லோன் வாங்கியதாக என்னிடம் கூறினார்கள் என்று முற்றிலும் புதிய சங்கதியை பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்.

17. தாவா காசோலையில் உள்ள கையொப்பம் என்னுடையது என்றாலும், மேற்படி காசோலைகள் கடனுக்காக கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல . புகார்தாரரிடமிருந்து வாங்கிய கடனை வைத்து சொத்துக்களை வாங்கி உள்ளேன் என்றால் சரியல்ல . நான் கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை . சொத்துக்கள் வாங்க வேண்டிய அவசியமும் இல்லை . நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய் என்றாலும் , நான் சட்டப்படி கடனை செலுத்த வேண்டும் என்றால் சரியல்ல. அழகுலெட்சுமி கொடுத்த வழக்கானது அவர் வாத நோய் ஏற்பட்டு வர இயலாததால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றாலும் , சாட்சியத்தின் அடிப்படையில் தள்ளுபடி செய்யப்படவில்லை என்றால் சரியல்ல . செல்வராஜ் எனது வேண்டிய நபர் என்றாலும், அவரை வைத்து வழக்கை திசைதிருப்ப முயற்சி செய்கிறோம் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல.